


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், அகஸ்தீஸ்வரம் வட்டம், சந்தையடி சமுதாய நலக்கூடத்தில் நடைபெற்ற இரண்டாம் கட்ட மனுநீதி நாள் முகாமில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை இன்று (10.08.2016) வழங்கினார்.
நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர். ராஜ்குமார், இணை இயக்குநர் (வேளாண்மைதுறை) திரு. இளங்கோ,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு. நிஜாமுதீன் ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண்: 511/2016 நாள்: 10.08.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் இன்று (10.08.2016) நடைபெற்ற இரண்டாம் கட்ட மனுநீதி நாள் முகாமில் 49 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், சந்தையடி சமுதாய நலக்கூடத்தில் இன்று (10.08.2016) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் இரண்டாம் கட்ட மனுநீதி நாள் முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

20.07.2016 அன்று நடைபெற்ற முதற்கட்ட முகாமில் 95 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன. இதில் 18 தகுதியான மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மனுநீதி திட்ட முதல் கட்ட நிகழ்ச்சியின் போது பெறப்பட்ட மனுக்களின் மீது, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் முன்னிலையில், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால், இன்று நடைபெற்ற இரண்டாம் கட்ட நிறைவு நாள் நிகழ்ச்சியில், பொது மக்களுக்கு பதில்கள் தெரிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து, வருவாய்த்துறை மூலம், 21 பயனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/- பெறுவதற்கான ஆணைகளையும், 15 பயனாளிகளுக்கு பட்டா மாறுதலுக்கான ஆணைகளையும், 11 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக 2 பயனாளிகளுக்கு இலவச தேய்ப்பு பெட்டிகள் என மொத்தம் 49 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

முன்னதாக வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் வணிகத்துறை, வேளாண் பொறியியல் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சமூகநல துறை, பிற்படுத்தபட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலதுறை மற்றும் வட்ட வழங்கல் அலுவலகத்தின் மூலம் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால், அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்து விளக்கவுரையாற்றினார்கள்.

மேலும் சுகாதாரத்துறை, தோட்டக்கலை துறை மற்றும் வேளாண்மை துறை மூலம் வைக்கப்பட்டிருந்த கண்காட்சியினை பார்வையிட்டார்.

நிகழ்ச்சியில் நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர். ராஜ்குமார், இணை இயக்குநர் (வேளாண்மைதுறை) திரு. இளங்கோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு. நிஜாமுதீன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு. பி.வி.சரவணன், உதவி ஆணையர் (கலால்) திரு. காளிமுத்து, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு. பிரம்மநாயகம், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் திரு. எ.வி. மூர்த்தி, வட்ட வழங்கல் அலுவலர் திரு. கோலப்பன், அகஸ்தீஸ்வரம் பேரூராட்சி தலைவர் திரு. சந்தையடி பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.